(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 294.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2013 ஓகத்து 06, செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2448/ '12

1.

கௌரவ புத்திக பதிரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் நடைமுறையிலிருக்கும் நில்வளா திட்டத்தின் கீழ் வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்காக நிறுவப்பட்டுள்ள பம்பி நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு பம்பி நிலையமும் அமைந்துள்ள இடங்கள் எவை என்பதையும்;

(iii) அந்த பம்பி நிலையங்களில் தற்போது செயிலிழந்துள்ளவற்றின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்காக நிறுவப்பட்டுள்ள பம்பி நிலையங்கள் செயலிழந்துள்ளதனால் நில்வளா திட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைய முடியாதுள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அந்தப் பம்பி நிலையங்களை உடனடியாக புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறெனின் ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2594/ '12

2.

கௌரவ சஜித் பிரேமதாச,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேர்தல் வேட்பாளர் பட்டியல்களில் தற்போதைய இளைஞர்களின் வீதமானது இளைஞர் விரக்தி பற்றிய ஆணைக்குழுவின் சிபார்சு ஒன்றாகும் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது அமுலிலுள்ள சட்டத்திற்கு அமைய உள்ளூராட்சித் தேர்தல்கள் வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்கப்பட வேண்டிய இளம் வேட்பாளர்களின் வீதம் எவ்வளவு என்பதையும்;

(ii) இளம் வேட்பாளராக கருதப்படுகின்ற ஒருவர் உரித்தாகும் வயதெல்லை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களின் போது மேற்படி இளம் வேட்பாளர்களின் வீதத்தைக் குறைப்பதற்கு அல்லது அவ்வாறே பேணிவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2716/ '12

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தினால் 2012 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையையும்;

(ii) அவ்வீடுகளை நிர்மாணித்த நிறுவனங்களையும்;

(iii) செலவுசெய்யப்பட்ட பணத்துக்கான மூலங்களையும்;

(iv) உரிமையாளரினால் அவர்கள் பெற்ற வீட்டுக்காக செலுத்த வேண்டிய தொகையையும்;

(v) அத்தகைய வீடுகள் ஒதுக்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலையும்;

(vi) மேற்கூறிய ஒரு வீட்டின் நிர்மாணத்துக்காக செலுத்தப்பட்ட செலவினத்தையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3044/ '12

4.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) களுத்துறை மாவட்டத்தின் மத்துமக, அகலவத்த மற்றும் புலத்சிங்கல பிரதேசங்களில் தனியார் மயப்படுத்தப்பட்ட அரச தோட்டங்களில் தொழிலாளர்களின் துப்புரவு ஏற்பட்டுப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட பணத்தொகை இத் தோட்டக் கம்பனிகளினால் குறைக்கப்பட்டுள்ளதால் இத்தொழிலாளர்கள் கடும் சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் வாழும் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இத்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுகாதார வசதிகள் யாவை என்பதையும்;

(iii) இத்தோட்டத் தொழிலாளர் சமுதாயத்தில் தற்போது காணப்படும், தாய், சேய் மரணங்கள், தொற்றாத நோய்கள் பீடித்தல், முறையற்ற கர்ப்பமுறல், மற்றும் குறையூட்டம் தொடர்பான புள்ளிவிபரத் தரவுகள் யாவை என்பதையும்

(iv) இப் பிரதேசங்களுக்குத் தேவையான துப்பரவேற்பாட்டு மற்றும் சுகாதார வசதிகளை துரிதமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

கௌரவ பி. ஹரிசன்,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்தற்கு,— (2)

(அ) (i) 2012 நவம்பர் மாதம் 09 ஆந் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலுக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) அன்றைய தினம் சிறைச்சாலையை சோதனையிடுவதற்காக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஈடுபடுத்தப்பட்டமைக்கான காரணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் சோதனையிடுதல் போதியதாயில்லாமையா என்பதையும்;

(iii) இதற்காக அந்த படையணியை ஈடுபடுத்துவதற்கு கட்டளை வழங்கியவர் யார் என்பதையும்;

(iv) சிறைச்சாலையை சோதனையிடும் பணியில் ஈடுபட்ட பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) இவர்கள் சிறைச்சாலைக்குள் ஆயுதங்களுடன் பிரவேசித்தார்களா என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட மோதலில்,

(i) கைதிகளுக்கு ஆயுதக் களஞ்சியத்தில் பிரவேசித்து ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் உதவி கிடைத்ததா என்பதையும்;

(ii) மதுவரித் திணைக்களத்தின் போதைப்பொருள் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவரின் தனிப்பட்ட தேவையின் அடிப்படையில் கைதிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) சிறைக்கைதிகளின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) சிறைச்சாலை ஆயுதக் களஞ்சியத்திலிருந்து ஆயுதங்களைப் பெறுவதற்கு கைதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) உயிரிழந்த கைதிகள் சார்பில் நட்டஈட்டுத் தொகையொன்றைச் செலுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(iii) இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3408/ '13

6.

கௌரவ அஜித் குமார,— கடற்றொழில், நீரக வள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மீன்பிடிப் படகுகள் அல்லது மீன்பிடிப் படகுகள் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள், மீன்பிடிப் படகுகளுக்கான என்ஜின்கள், வலைகள் மற்றும் வலைகளையும் உபகரணங்களையும் உற்பத்தி செய்வதற்கான பொருட்கள் மற்றும் ஏனைய மீன்பிடி உபகரணங்கள் இறக்குமதி செய்யப்படும்போது அறவிடப்படுகின்ற வரி வகைகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு பொருளுக்கும் அறவிடப்படுகின்ற ஒவ்வொரு வரி வகையினதும் வீதங்கள் எவ்வளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3467/ '13

7.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் திரிபோசா உற்பத்தி செய்யும் தொழிற்சாலை கடந்த நாட்களில் மூடப்பட்டிருந்ததா;

(ii) அவ்வாறெனின் அதற்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தொழிற்சாலை மூடப்பட்டுள்ளமையானது, அதன் இயலளவினை 100% த்தினால் அதிகரிப்பதற்கு 2011 சனவரி மாதம் இலங்கை புகையிலை கம்பெனியிடமிருந்து அத்தொழிற்சாலையை பொறுப்பேற்கும் போது ஏற்படுத்திக் கொண்ட இலக்கினை அடைவதில் இடையூறாக அமையாதா;

(ii) அவ்வாறெனின் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை யாது

என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) திரிபோசா தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலைமையின் கீழ் போசாக்குக் குறைந்த பிள்ளைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தேவையான திரிபோசா வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ச்சியாக பேணிவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(ii) அவ்வாறெனின் அந்நடவடிக்கைகள் யாவை

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3576/ '13

8\.

கௌரவ சுஜீவ சேனசிங்க,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தபால் சேவையை வலைப்பின்னலொன்றாக்குவதற்காக ரூபா 30 கோடிக்கு மேற்பட்ட பணத்தொகையொன்று செலவிடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக பெறப்பட்ட கனணிகளும் துணைப்பாகங்களும் 05 வருடகாலமாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படவில்லை என்பதையும்;

(iii) கொள்வனவு செய்யப்பட்ட கனணிகளின் உத்தரவாதக் காலம் தற்போது முடிவடைந்துள்ளதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டம் கையளிக்கப்பட்டுள்ள நபர் ஊழல் குற்றச்சாட்டொன்றில் குற்றவாளியாகியுள்ளாரென்பதையும்;

(v) மேற்படி கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாதெனக் கூறி தபால் மாஅதிபர் பொறுப்புக்கூறுவதிலிருந்து விலகியுள்ளாரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ)மேற்படி கருத்திட்டதிற்காக ஆரம்பத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 30 கோடிக்கு மேலதிகமாக மேலும் ரூபா 35 கோடியை தபால் திணைக்களம் கோரியதற்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3600/ '13

9\.

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள இலங்கை ஊழியர்களின் நலனோம்புகை நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்ப்பதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் இலங்கைத் தூதரகங்களுக்கு நலன்புரி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும்;

(ii) வெளிநாடுகளில் பல்தரப்பட்ட துன்புறுத்தல்களுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாகின்ற இலங்கை ஊழியர்களுக்கு இவர்களில் பெரும்பாலான உத்தியோகத்தர்களிடமிருந்து ஒழுங்கான சேவை கிடைப்பதில்லை என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி நலன்புரி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படும் போது கவனத்திற் கொள்ளப்பட்ட தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) நியமிக்கப்பட்டுள்ள மேற்படி உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பதவிக்கு சர்வதேச சட்ட திட்டங்கள் தொடர்பாகவும், சம்பந்தப்பட்ட நாட்டின் மொழி மற்றும் கலாசாரம் தொடர்பாகவும் அறிவினையும் தகைமைகளையும் கொண்ட உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3729/ '13

10.

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "மஹிந்த ராஜபக்ஷ" என்ற பெயர் சூட்டப்பட்டுள்ள இலங்கையின் துறைமுகங்கள், கலையரங்குகள், விளையாட்டு மைதானங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் யாவை என்பதையும்;

(ii) இப்பெயரால் மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் அல்லது கருத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்ட திகதிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் அல்லது கருத்திட்டத்திற்கும் செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) பாடசலைகள் மற்றும் வைத்தியசாலைகள் தவிர்ந்த மேலே குறிப்பிடப்பட்ட வருமானம் ஈட்டும் நிறுவனங்களிலிருந்து இற்றைவரை இந் நாட்டிற்குக் கிடைத்துள்ள வருமானம் எவ்வளவென்பதையும்

இவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3774/ '13

11.

கௌரவ விஜித பேருகொட,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1987 ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்குமிடையே சனாதிபதி கௌரவ ஜே.ஆர் ஜயவர்தன அவர்களாலும் பிரதம அமைச்சர் கௌரவ ராஜீவ் காந்தி அவர்களாலும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட திகதி மற்றும் உடன்படிக்கை களில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் சுருக்கமாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3868/ '13

12.

கௌரவ கனக ஹேரத்,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'கப்ருக்க' முதலீட்டுக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற கருத்திட்டத்தின் இயல்பு யாது என்பதையும்;

(ii) தெங்குக் கைத்தொழிலின் மேம்பாட்டுக்காக 'கப்ருக்க' முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தினால் வழங்கப்படுகின்ற பங்களிப்பு யாது என்பதையும்;

(iii) 'கப்ருக்க' முதலீட்டின் கீழ் கடன் வழங்கப்படுமாயின், அக்கடனை தீர்க்கும் முறை யாது என்பதையும்;

(iv) 'கப்ருக்க' முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இது வரை வழங்கப்பட்டுள்ள கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) தற்போது, மேற்படி நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(vi) 'கப்ருக்க' முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தை நாடளாவிய ரீதியில் அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3869/ '13

13.

கௌரவ செஹான் சேமசிங்க,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் 'கப்ருக்க' சங்கங்கள் ஆரம்பிக்கப்படுமென 2012 வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது தெரிவிக்கப்பட்டவாறு, 'கப்ருக்க புரவர' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏற்கனவே தாபிக்கப்பட்டுள்ள மேற்படி சங்கங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட ரீதியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) ஒரு சங்கத்திற்கு சுழற்சி நிதியாக ரூபா 15,000/- வழங்கப்படுமென குறிப்பிடப்பட்டதற்கமைய இற்றைவரை 'கப்ருக்க' சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) ஏற்கனவே சகல 'கப்ருக்க' சங்கங்களுக்கும் நிதி வழங்கப்படவில்லையாயின், அத்தகைய நிதி வழங்கப்படாதுள்ள சங்கங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி சங்கங்களுக்கு நிதி வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) இதுவரை நிதி வழங்கப்படாதுள்ள 'கப்ருக்க' சங்கங்களுக்கு நிதி வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2601/ '12

14.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான சனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் பிரதானமான அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகளின் பொழிப்பில் 71 வது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மக்களைக் கேந்திரமாகக் கொண்ட அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்படல் வேண்டுமென்ற விதப்புரையுடன் அரசாங்கம் இணங்குகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கிணங்க அதிகாரத்தைப் பகிர்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி விதப்புரையின் பிரகாரம் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் அமுலாக்கப்படுகின்ற திகதி யாதென்பதையும்;

(v) அதிகாரப் பகிர்வினை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வு வழங்கப்படுமாயின் அது தொடர்பில் பாராளுமன்றம் விழிப்புணர்வூட்டப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மே 03 ஆம் திகதிய 1808/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 யூன் 07 ஆம் திகதிய 1813/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 10ஆம் பிரிவின் கீழான இறக்குமதித் தீர்வைகள் சம்பந்தமான, 2012.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2013 யூன் மாதம் 20 ஆம் திகதிய 1815/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மாச்சு 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

12.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

15.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.